DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No.06/2020**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW1 | Caste | : | |
| Name | : | பாலசுப்பிரமணியன் | Age | : | 53 |
| F/N | : | மாணிக்கம் | Occupation | : | சிறப்பு உதவி ஆய்வாளர் (அனுப்பர்பாளையம் காவல் நிலையம்) |
| Village | : | | | | |
| District | : | திருப்பூர் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 23rd day of May 2024.

**23.05.2024**

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது திருப்பூர் மாநகரம் அனுப்பர்பாளையம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.10.2019 ம் தேதி இராமநாதபுரம் குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு துறையில் தலைமைக்காவலராக பணியில் இருந்தபோது காலை 10.00 மணிக்கு குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு துறை சார்பு ஆய்வாளர் அவர்கள் திருமதி. சசிகலா, பெண் தலைமைக்காவலர் 494 திருமதி. ஜெயப்பிரியா, முதல்நிலைக்காவலர் 656 திரு.சதீஸ்குமார் ஆகியோருடன் அத்தியாவசிய பொருட்கள் கடத்தல் மற்றும் பதுக்கல் சம்பந்தமாக இராமநாதபுரம் வசந்த நகர் பஸ் ஸ்டாப் அருகே சோதனை செய்தபோது தகவலின் பேரில் அந்த இடத்தில் நான்கு பாலிதீன் சாக்கு மூட்டைகளுடன் உட்கார்ந்திருந்த எதிரியிடம் அந்த மூட்டையில் என்ன இருக்கிறது என்று கேட்டபோது ரேசன் அரிசி இருக்கிறது என்று அவர் ஒப்பு கொண்டார். அதை பிரித்து பார்த்தபோது தமிழக அரசால் பொது விநியோக திட்டத்தின் கீழ் பொது மக்களுக்கு வழங்கப்படும் ரேசன் அரிசி என்று கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் அவரை பற்றி விசாரிக்க இராமநாதபுரம் வசந்த நகர், சுப்பிரமணிய சுவாமி கோவில் வடக்கு தெருவை சேர்ந்த பெரியசாமி மனைவி மாலா என்று தெரிய வந்தது.

2. மேலும் சார்பு ஆய்வாளர் அவரிடம் விசாரிக்க ரேசன் அரிசி வைத்திருந்ததற்கான ஆவணங்கள் ஏதும் இல்லாத காரணத்தினால் ஆதாயம் நோக்கம் கருதி வைத்திருந்ததால் காலை 10.15 மணிக்கு அவரை கைது செய்து விசாரிக்க எந்த வித அச்சுறுத்தலும், துன்புறுத்தலும் இன்றி அவர் தாமாக முன் வந்து காலை 10.30 மணிக்கு ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த

ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், பெண் தலைமைக்காவலர் ஜெயப்பிரியா என்பவரும் கையெழுத்து செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். **(அந்த கையெழுத்து அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் காலை 11.30 மணிக்கு அதே இடத்தில் இருந்த 50 கிலோ எடை கொண்ட நான்கு சிப்பம் ரேசன் புழுங்கல் அரிசியை அத்தாட்சி தயார் செய்து சார்பு ஆய்வாளர் கைப்பற்றினார். அதில் நானும், தலைமைக்காவலர் ஜெயப்பிரியா என்பவரும் கையெழுத்து செய்தோம். **(அத்தாட்சி அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. பின்னர் ஏற்கனவே அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் காலை 11.45 மணிக்கு வசந்தம் நகரில் உள்ள எதிரியின் வீட்டிற்கு சென்று அங்கிருந்த தலா 50 கிலோ எடை கொண்ட 21 பாலிதீன் சிப்பம் புழுங்கல் அரிசியை எதிரி எடுத்து ஆஜர்படுத்தியதை சார்பு ஆய்வாளர் அவர்கள் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். அந்த அத்தாட்சியிலும் நானும், தலைமைக்காவலர் ஜெயப்பிரியா என்பவரும் கையெழுத்து செய்தோம். **(அத்தாட்சி அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் அத்தாட்சியில் கைப்பற்றிய 25 சிப்பம் ரேசன் அரிசியை இராமநாதபும் குடிமைப்பொருள் கிட்டங்கியில் ஒப்படைத்து எதிரியுடன் மதியம் 02.30 மணிக்கு நிலையம் வந்து வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார். ஆய்வாளரும் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

1. நாங்கள் எந்தெந்த நேரத்தில், எந்தெந்த பணியில் இருந்தோம் என்பது எங்களது பாக்கெட் டைரியில் இருக்கும் என்றால் சரிதான். சார்பு ஆய்வாளர் மற்றும் ஆய்வாளரின் விசாரணையின்போது சம்பவ சமயத்தில் சம்பவ இடத்தில் இருந்ததற்குண்டான பாக்கெட் டைரியை சமர்ப்பித்தேனா என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், அதனால் தான் பாக்கெட் டைரியை சமர்ப்பிக்கவில்லை என்றாலும் சரியல்ல. வசந்த நகர் பஸ் ஸ்டாப் என்பது மக்கள் அதிகமாக நடமாடும் இடம் என்றால் சரிதான். அந்த சாலையில் மினி பேருந்துகள் உட்பட பல வாகனங்கள் வந்துபோகும் சாலை என்றால் சரிதான். சாலையின் எந்த பகுதியில் எதிரி இருந்தார் என்பதை பற்றி சார்பு ஆய்வாளர் மற்றும் ஆய்வாளர் ஆகியோர்களின் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சாலையின் இருபுறமும் பேருந்து நிறுத்தம் உள்ளது என்றால் சரிதான். எந்த நிற சிப்பம் மற்றும் எந்த நிறுவனத்தின் சிப்பம் என்று ஒப்புதல் வாக்குமூலத்திலும், அத்தாட்சிகளிலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

2. அரிசியை பார்த்தவுடன் அது பொதுவிநியோகத்தில் வழங்கப்படும் ரேசன் அரிசி என்று கண்டறியும் நிபுணர் நான் இல்லை என்றால் சரிதான். பகுப்பாய்வு செய்தால் தான் அரிசியின் தன்மையை பற்றி தெரிய வரும் என்றால் சரிதான். ஆஜர் எதிரியிடம் இருந்து மற்ற நபர்களிடம் இருந்து அரிசி வாங்க வைத்திருந்த

பணத்தையும், அரிசியை அளவீடு செய்ய பயன்படுத்தும் கருவிகளையும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். அன்றைய தினம் நாங்கள் அளவுகோல் எதையும் சம்பவ இடத்திற்கு எடுத்து செல்லவில்லை என்றால் சரிதான். அன்றைய தினம் நாங்கள் ரோந்திற்கு காவல் வாகனமான டாட்டா சுமோ வாகனத்தில் சென்றோம். அந்த வாகனத்தில் 25 சிப்பம் அரிசியை ஏற்ற முடியாது என்றாலும், அது பயணிகள் வாகனம் என்றாலும் சரிதான்.

3. அன்றைய தினம் எதிரி வைத்திருந்ததாக சொல்லப்படும் அரிசியை எந்த நபரிடமிருந்து பெறப்பட்டது என்பதை பற்றி சார்பு ஆய்வாளர் விசாரணை செய்தாரா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. சார்பு ஆய்வாளர் எதிரியை விசாரணை செய்யும்போது நான் உடன் இருந்தேன் என்றால் சரிதான். எதிரி என்ன வாக்குமூலம் கொடுத்தார் என்பதை பற்றியும், அது எவ்வாறு பதிவு செய்யப்பட்டது என்பதை பற்றியும் எனக்கு நேரடியாக தெரியும் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி எந்த நபரிடமிருந்து அரிசியை வாங்கினார் என்ற விபரம் இல்லை என்றால் சரிதான். எந்த கதவு எண் கொண்ட வீட்டில் இருந்து 21 சிப்பம் அரிசி கைப்பற்றப்பட்டது என்று அத்தாட்சியில் இல்லை என்றால் சரிதான். வசந்த நகர் என்ற பகுதி பல்வேறு தெருக்கள் கொண்ட பகுதி என்றால் சரிதான். எந்த தெருவில் உள்ள வீட்டிலிருந்து அரிசி கைப்பற்றப்பட்டது என்று அத்தாட்சியில் இல்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.3 ல் கைப்பற்றப்பட்ட இடம் வசந்த நகர் பஸ் ஸ்டாப் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. எதிரியின் வீட்டின் எந்த அறையில் இருந்து அரிசி கைப்பற்றப்பட்டது என்று எனது விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் சார்பு ஆய்வாளர் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். வசந்த நகரில் கிராம நிர்வாக அலுவலர் போன்ற அரசு ஊழியர்கள் உள்ளார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கில் தனிநபர் சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எந்த ரோந்திற்கும் நாங்கள் செல்லவில்லை என்றாலும், எதிரியிடம் இருந்து எவ்விதமான பொருட்களையும் கைப்பற்றவில்லை என்றாலும், அதனால் தான் அந்த பொருட்களை பற்றி என்னால் முறையாக சாட்சியம் அளிக்க முடியவில்லை என்றாலும், எதிரிக்கும், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருட்களுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. புள்ளி விவரத்திற்காக எதிரி மீது இந்த வழக்கை தொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரியை சார்பு ஆய்வாளர் சட்ட விரோதமாக கைது செய்துள்ளார் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை

**(ஒப்பம்/-க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**